DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 125/2024 LW- 2 PW- 6

| | |
|---|---|
| Name | : நாகலெட்சுமி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : விவேக்குமார் |
| Village | : கம்பிளியம்பட்டி |
| Taluk | : வடமதுரை |
| District | : திண்டுக்கல் |
| Age | : 27/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். இறந்து போன சின்னபொட்டு என்பவர் எனது அம்மாச்சி ஆவார். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 7.00 மணியளவில் சமுத்திராப்பட்டியில் உள்ள எனது அம்மாச்சி சின்னபொட்டுவின் வீட்டிற்கு வலதுபுறத்தில் என் அம்மாச்சி கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி சிறுகுடியிலிருந்து சமுத்திராப்பட்டி நோக்கி அதிகவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து என் அம்மாச்சி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்து ஏற்படுத்திய பின் ஆஜர் எதிரி சுமார் 10 அடி தூரம் சென்று இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். நாங்கள் எங்கள் அம்மாச்சியை பார்த்தபோது என் அம்மாச்சிக்கு வலது பக்க நெற்றிப் பொட்டில் பலத்த காயம் பட்டும், ஒரு கால் ஒடிந்தும் சுய நினைவில்லாமல் இருந்தார். பின்னர் 108 அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சுமார் ஒரு மணி நேரத்தில் மதுரை அரசு ராஜாஜி

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் அம்மாச்சி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மறுநாள் காலையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) அ.சா.1 அமுதா எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயார் சிலுவத்தூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது அம்மா வசித்து வரும் ஊருக்கும் சமுத்திரப்பட்டிக்கும் 30 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கும். நான் வடமதுரையில் உள்ள கம்பிளியம்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். கம்பிளியம்பட்டியில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50, 60 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அ.சா.3 கோகிலா என்பவர் சிலுவத்தூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 பாண்டீஸ்வரி எனது அக்கா என்றால் சரிதான்.

3) சம்பவ சமயம் எனது அக்கா சிலுவத்தூரில் வசித்தார் என்றால் சரிதான். விபத்து தொடர்பாக ராதிகா என்பவர் சொல்லி தான் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல, நாங்கள் அங்கு தான் இருந்தோம். எதற்காக சம்பவ தினத்தன்று சமுத்திராபட்டிற்கு வந்தோம் என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் அதைப் பற்றி கேட்காததால் சொல்லவில்லை. தற்போது அளித்த சாட்சியத்திலும் எதற்காக சமுத்திராப்பட்டி வந்தேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது, எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் சமுத்திராப்பட்டிக்கு வந்து சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்.

4) சம்பவத்திற்கு பிறகு எதிரி அங்கு இருந்தாரா இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டாரா போன்ற விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் அதை பதிவு செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. போலீசார் மற்றவர்களை

விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் அருகே வசித்த நபர்கள் மற்றும் அருகே உள்ள கடையில் இருந்தவர்கள் ஆகியவர்களை விசாரித்தார்கள், அவர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் இல்லை. அக்கம் பக்கத்தில் இருந்த நபர்களை போலீசார் விசாரித்தார்கள் என்ற விபரத்தை நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) காயம்பட்ட நபரை எப்போது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் 108 ஆம்புலன்ஸ் வர அரை மணி நேரம் ஆனது. ஆம்புலன்ஸில் நான் சென்றேனா என்றால் இல்லை, குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டியது இருந்ததால் நான் வீட்டில் இருந்தேன். நானும் ஆம்புலன்ஸில் சென்றதாக போலீசார் விசாரணையில் தெரிவித்தது போன்று வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ்க்கு யார் தகவல் சொன்னார் என்றால் ஊர்காரர்கள் தான் சொன்னார்கள், யார் என்று தெரியாது. விபத்து நடந்த உடன் எதிரி அங்கிருந்து ஓடி விட்டாரா அல்லது அவரை பிடித்து காவல் நிலையத்தில் மற்றவர்கள் ஒப்படைத்தார்களா போன்ற விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவர் நின்று கொண்டிருந்தார்.

6) நாங்கள் இருந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்திற்குள் விபத்து நடந்தது. இரவு நேரம் என்பதால் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அப்போது எதிரி விபத்து ஏற்படுத்தியதை ஒப்புக்கொண்டார். எதிரி ஒப்புக்கொண்டார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, போலீசார் விசாரணையில் சொன்னேன். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த இருசக்கர வாகனம் எந்த வகையான வாகனம் என்றால் தெரியாது. எந்த வண்டி மோதியது என்று அந்த வண்டியை குறிப்பிட்டு அதன் எண்ணை குறிப்பிட்டு போலீசார்

விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, போலீசார் விசாரணையில் சொன்னேன், நாட்கள் ஆகிவிட்டதால் வண்டி எண் தற்போது ஞாபகம் இல்லை.

7) நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், மற்றவர்கள் சொல்லி தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றாலும் சரியல்ல. நான் வெளியூரை சேர்ந்தவர் என்பதால் உண்மையில் சம்பவம் நடந்து சமயம் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் என்ன காரணத்திற்காக அந்த ஊருக்கு வந்தேன் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லி இருப்பேன் என்றாலும், அதனால் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக தான் எனது அம்மா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.12 14:45:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்